சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண்.111/2020

PW - 2

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 02 ம் நாள் திங்கட்கிழமை (1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திரு.எம்.மணிகண்டன், எம்.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | வீரக்குமார் |
| த.பெ. | கோவிந்தசாமி |
| வயது | 41 |
| முகவரி | அழகிரி செட்டிபாளையம், கோவில்பாளையம். |

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனது ஆதார அடையாள அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அசல் நகலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு நகல் **வாசாஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தகப்பனார் பெயர் கோவிந்தசாமி என்று சொன்னால் சரிதான். எனது தாயார் பெயர் காளியம்மாள் என்றால் சரிதான். எனது ஆதார் அட்டையிலும் மேற்கண்ட விவரங்கள் உள்ளது என்றால் சரிதான். எனது பெற்றோர்களுக்கு நானும், எனது சகோதரி செல்வி தான் வாரிசுகள் என்றால் சரிதான். எனது தாயார் காளியம்மாள் கடந்த 28.07.2006 ம் வருடம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தாயாருக்கு ஏற்கனவே திருமணம் ஆகி முதல் கணவர்

பொள்ளாச்சி பாலக்காடு ரோடு காந்தி நகரை சேர்ந்த சுந்தரம் மகன் காலஞ்சென்ற ராஜன் என்று சொன்னால் சரிதான். ராஜன் என்பவருக்கும், எனது தாயாருக்கும் திருமணம் ஆகி சில மாதங்களிலேயே கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து விட்டார்கள் என்றால் சரிதான். பின்னர் எனது தகப்பனாரை 2 வது திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். எனது தாயாருக்கு முதல் கணவரான ராஜனுக்கு வாரிசு இல்லை என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த விவரங்கள் எனது தாயாரும், உறவினர்களும் கூறியதன் அடிப்படையில் தான் தெரியும் என்றால் சரிதான்.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி